Bitsmans Institutes
Manipay.
A/L 88 Aug.
அசேதன இரசாயனம்
(Inorganic)
ஆசிரியர்:
திரு. மகாதேவா B.Sc. (Hons)
ஆரம்பம்: 17-01-87
சனி 12-30 — 1-30 p.m

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ-1/=

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

BITSMANS
INSTITUTES
Manipay.
A/L 87 Aug.
காந்தப்புலங்களும்
ஒட்டமின்னியலும்
ஆசிரியர்:
திரு. சௌந்தி B. Sc. (Hons.)
ஆரம்பம்: 17-01-87
சனி 6.30 -- 8,00 a.m.

சுடர்:- 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு தை மீ 3 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமாதி அவ் பிறை 15 (16 01-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY சுதிர் 43

# அகதிகள் வந்த படகின் மீது படையினர் சூடு!

## 9 பேர் பற்றித் தகவல் இல்லை; தப்பியவரின் பயங்கர அனுபவம்

— உதயன் வல்வைச் செய்தியாளர்: சி. சுந்தரலிங்கம் —

வல்வெட்டித்துறை, ஜன. 16

தமிழ் நாட்டிலிருந்து அகதிகளுடன் வந்த படகு ஒன்று மாதகல் கடற்பகுதியில் வைத்து கடந்த திங்கள் இரவு கடற்படையின் தாக்குதலுக்கு இலக்காகி முற்றாக எரிந்து சாம்பரானது. அதில் வந்த பத்துத் தமிழரில் ஒருவர் மட்டும் தெய்வாதீனமாக உயிர் தப்பிக் கரை சேர்ந்தார்.

இந்தச் சம்பவத்தில் உயிர்தப்பிய இளைஞர் தமக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவத்தை உதயன் செய்தியாளரிடம் விவரித்தார்.

அவர் கூறியதாவது:-

நான் ஒரு படகோட்டி, தொண்டமானாறு பெரிய கடற்கரையைச் சேர்ந்தவன்.

அரச கெடுபிடி காரணமாக எமது மீன்பிடித் தொழில் பாதிப்படைந்தது.

இதனால் கடத்தல் வியாபாரத்தில் ஈடுபட்ட ஒரு முதலாளியின் கீழ் படகோட்டியாக வேலை செய்தேன்.

கடந்த திங்கட்கிழமை இரவு 10 மணியளவில் கடத்தல் சாமான்களுடன் இந்தியாவிலிருந்து மாதகல் கடற்பகுதி வழியாக வந்துகொண்டிருந்தோம்.

படகில் என்னைத்தவிர இரண்டுபேர் படகோட்டிகள். ஏனையோர் தமிழகத்தில் தங்கியிருந்த இலங்கைத் தமிழ் அகதிகள்.

திடீரென எதிர்பாராத வகையில் இலங்கைக் கடற் படையின் ''ஸ்பீட் போட்'' குறுக்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் ஆர்ப்பாட்டப் பேரணி

யாழ்ப்பாணம், ஜன. 16

எரிபொருள் தடையைக் கண்டித்து நேற்று பருத்தித்துறையில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றது.

நூற்றுக்கும்மேற்பட்ட பெண்களும் ஆண்களும் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

பருத்தித்துறை சிவன் கோவிலடியில் இருந்து காலை பத்துமணி அளவில் ஆரம்பமான இவ்வூர்வலம் பருத்துத்துறை வீதிவழியாக மந்திகை வரை சென்றது.

மந்திகை உதவி அரச அதிபர் அலுவலகத்தில் முடிவுற்ற இவ்வூர்வலத்தின் பின்னர் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. (உ-10)

## யாழ். ஆஸ்பத்திரியில் சத்திர சிகிச்சையும் நெருக்கடி நிலையில்

யாழ்ப்பாணம், ஜன.16

மட்டுப்படுத்தப்பட்ட ரீதியிலேயே சத்திர சிகிச்சைகள் யாழ் ஆஸ்பத்திரியில் மேற் கொள்ளப் பட்டுவருகின்றன.

வவுனியாவில் இருந்து 'ஒக்ஸிஜன்' சிலிண்டர்கள் வருவதில் ஏற்பட்டுள்ள தடையே இதற்குக் காரணம் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

வடபகுதி மீதான எரிபொருள் தடையைத் தொடர்ந்தே 'ஒக்ஸிஜன்' சிலிண்டர்களை ஒழுங்காகப் பெற்றுக் கொள்வதில் தடை ஏற்பட்டுள்ளது. (உ-எ)

வாடிக்கையாளர்களுக்கு ஒரு முக்கிய

### அறிவித்தல்

சாமுவேல் சன்ஸ் அன் கொம்பனி லிமிட்டெட்

உங்களது சௌகரியத்திற்காக செம்மணி வீதி, நல்லூரிலுள்ள எங்களது தொழிற்சாலையில் மேலதிக விற்பனை நிலையம் ஒன்று திறந்திருக்கிறோம் என்பதை இன்னுமொரு முறை நினைவூட்ட விரும்புகிறோம்.

அமைப்பு:

முத்திரைச் சந்தியிலிருந்து 50 யார் தூரத்திலும் கச்சேரி - நல்லூர் வீதி, செம்மணி வீதிச் சந்திக்கு எதிராகவும் அமைந்துள்ளது.

முக்கிய குறிப்பு:

ஆஸ்பத்திரி வீதியிலுள்ள எங்களது விற்பனை நிலையம் வழமைபோல் தொடர்ந்து இயங்கும்.

தொலைபேசி இல: 206, 208, ஆஸ்பத்திரி வீதி,
22462 — யாழ்ப்பாணம்

தொலைபேசி இல; 17, செம்மணி வீதி,
22199 — நல்லூர்

முச்சந்தி முனி



போன மச்சான் திரும்பிவந்தார் முகம் கோணியபடி என்ட கதையோ பின்னே...!

# ஊர்காவல் படை கலைப்பு! காத்தான்குடியில்

மட்டக்களப்பு, ஜனவரி 15

காத்தான்குடியில் செயற்பட்டுவந்த ஊர்காவல்படை கலைக்கப்பட்டு விட்டது.

காத்தான்குடி மக்களின் வேண்டுகோளைத் தொடர்ந்து ஊர்காவல் படை கலைக்கப்பட்டுவிட்டதாக மட்டக்களப்பு இரண்டாவது எம். பி. ஜனுப் றிஸ்வி சின்னலெப்பை நேற்று அறிவித்தார்.

கொழும்பில் கடந்த புதன் நடந்த சந்திப்பு ஒன்றின்போது இந்த முடிவு எடுக்கப்பட்டது.

சிராவஸ்தியில் மட்டக்களப்பு இரண்டாவது எம். பி. ஜனுப் றிஸ்வி சின்னலெப்பை தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், காத்தான்குடி ஊர்காவல்படைத் தலைவர் ஏ. எஸ். பதுறுதீனின் ஒப்புதல் பெறப்பட்டது.

இப்படையில் 50 பேர் இருந்தனர். படையினரின் சில செயல்களினால் தமிழர் பெரும் அதிருப்தியுற்று இருந்தனர்.

அண்மையில் ஊர்காவல் படைமீது தாக்குதல் ஒன்றும் நடத்தப்பட்டது. அத்தாக்குதலில் பல ஊர்காவல் படையினர் இறந்தனர் என்பது தெரிந்ததே.

இதேவேளை கல்வியங்காடு, சாஹிரா வித்தியாலயத்தில் நடைபெற்றகூட்டம் ஒன்றில் பேசுகையில் ஜனுப் சின்னலெப்பை மேலும் சொன்னதாவது:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழருக்குமட்டுமல்ல முஸ்லிம்களுக்கும் பிரச்சினை உண்டு.

இரண்டு இனங்களும் ஒன்றுசேர்ந்துதான் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டும்.

எமக்குள்ள பொதுவான பிரச்சினைகளுக்குத் தமிழ், முஸ்லிம் மக்கள் இணைந்து தீர்வு காண வேண்டும்; குரல் எழுப்ப வேண்டும். போராட வேண்டிய கட்டம் வந்தால் இரு தரப்பினரும் இணைந்து போராடவும் வேண்டும். இதன்மூலம் எமது பாதிப்புக்கு நிவாரணம் காணமுடியும் --

—இப்படி ஜனுப்றிஸ்வி சின்னலெப்பை சொன்னார். (உ-எ-21)

## சுடலைக்கு மட்டுமே விறகு விநியோகம்

### வடக்கில் நிலைமை மோசம்

யாழ்ப்பாணம், ஜன. 16

யாழ் குடாநாட்டில் உள்ள பல விறகு காலைகளில் மரணச் சடங்குகளுக்கு மட்டுமே விறகு வழங்கப்படுகிறது.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் யாழ் குடாநாட்டுக்கான எரிபொருள் விநியோகம் - தடைசெய்யப் பட்டதை அடுத்து விறகு ஏற்றிவரும் லொறிகளும் ஆனையிறவைத்தாண்டி குடாநாட்டிற்குள் வர அனுமதிக்கப்படவில்லை.

இதன் காரணமாக யாழ் குடாநாட்டில் விறகுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

விறகுத் தட்டுப்பாடு காரணமாக அரச விறகுகாலைகளில் தற்பொழுது கையிருப்பில் உள்ள விறகுகள் மரணச்சடங்குகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

# ராஜீவைச் சந்திக்காமலே கொழும்பு திரும்பினார் காமினி

கொழும்பு, ஜன 16

அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியைச் சந்திக்காமலேகொழும்பு திரும்பினார்.

அமைச்சர் காமினி திஸநாயக்கா, ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் விசேட தூதராகச் சென்றதால், பிரதமரையும் சந்தித்துப் பேசுவார் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இணை அமைச்சர்கள் நட்வர்சிங், சிதம்பரம் ஆகியோரைச் சந்தித்துப் பேசிய அமைச்சர் காமினி திஸநாயக்கா நேற்று வெளியுறவு அமைச்சர் திரு. என். டி. திவாரியையும் சந்தித்துப் பேசினார்.

நேற்று மாலை அமைச்சர் காமினி திஸநாயக்கா கொழும்பு திரும்பினார்.

இதனிடையில் காத்மண்டு சென்றுள்ள வெளியுறவமைச்சர் திரு, திவாரி அங்குசென்றுள்ள பாகிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், மாலைதீவு, இலங்கை வெளியுறவு அமைச்சர்களைத் தனித்தனியே சந்தித்து இரு தரப்பு விஷயங்களைப் பேசுவார் என்று ஆகாஷவாணி நேற்று இரவு அறிவித்தது.

இன்று வெள்ளி காத்மண்டுவில் நடைபெறும் சார்க் அமைப்பு தலை

(4ஆம்பக்கம் பார்க்க)

# கொலன்னாவை குதத்திற்கு குண்டு வைக்க முயற்சி!

## தமிழ் இளைஞர் ஒருவர் கைது

கொழும்பு, ஜன. 16

பவுஸர் ஒன்றுக்குள் குண்டு ஒன்றை வைத்து கொலன்னாவை எண்ணெய்க்குதத்துக்கு அனுப்ப எடுத்ததாகக் கூறப்படும்முயற்சி ஒன்று முறியடிக்கப்பட்டதாக கொழும்பு பொலீஸார் அறிவித்தனர்.

இது சம்பந்தமாக மட்டக்களப்பைச் சேர்ந்ததாகச் சொல்லப்படும் தமிழ் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் வீதி அருகே ஒரு பவுஸருக்குள் குண்டு வைக்கச் சிலர் முயற்சித்தனர்என்றும்--

அந்த நேரம் அங்கு வந்த பொலீஸார் அதனை முறியடித்தனர் என்றும் தெரிகிறது.

பொலீஸாரால் ஒருவரைக் கைது செய்ய முடிந்தது, மற்ற நபர் தப்பி ஓடிவிட்டார்.

இவர்கள் தங்கியிருந்ததாகக் கூறப்படும் வீட்டின் சொந்தக்காரரையும் பொலீஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர் (உ-எ-1)

## வீடுவீடாகச் சோதனை

கொழும்பு,ஜன.16

கொழும்பு நகரில் நேற்று இரவு தமிழர் வாழும் பகுதிகளில் பொலீசார் வீடு வீடாகச் சோதனை நடத்தினர்.

கொலன்னாவை எண்ணெய்க்குத குண்டு வெடித் தகர்ப்பு முயற்சிச் சம்பவத்தில் தப்பி ஓடியதாகக் கூறப்படும் நபரைக் கண்டுபிடிக்கவே இத்தீவிரத் தேடுதல் நடத்தப்பட்டதாகத் தெரிகிறது.

கொலன்னாவைச் சம்பவம்பற்றி அறிவிக்கப்பட்ட பின்னர் நேற்று மாலை கொழும்பில் தமிழர்கள் நடமாட்டங்களைப் பெருமளவில் குறைத்துக் கொண்டனர். (உ-எ-1)

# வேலையிழந்த ஊழியர் இன்று மறியற்போர்

யாழ்ப்பாணம், ஜன.16

வடபகுதியில் உள்ள விற்பனைத் திணைக்களத்தின் மக்கள் கடைகள் நேற்றுத் தொடக்கம் மூடப்பட்டதைத் தொடர்ந்து வேலை இழந்த 72 ஊழியர்களும் இன்று வெள்ளி அடையாள மறியல் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள விற்பனை அபிவிருத்தித் திணைக்கள பிராந்திய ஆணையாளர் அலுவலகத்துக்கு முன்

(4-ம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பு முகாம் கைதிகள் சிறைச்சாலைக்கு மாற்றம்?

மட்டக்களப்பு,ஜன.16

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயுதபடை முகாம்களில் விசாரணை முடிந்த பின்னர் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களை மட்டக்களப்பு சிறைச் சாலைக்கு இடமாற்றம் செய்ய பாதுகாப்பு வட்டாரங்கள் முடிவு செய்துள்ளன.

நேற்று இது சம்பந்தமாக ஆயுதப்படை அதிகாரிகள் மட்டக்களப்பு சிறைச் சாலை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டனர்.

இடமாற்றஞ் செய்யப்படும் கைதிகளை உடனடியாகப் பொறுப்பேற்க முடியாது என்று தெரிவித்த சிறைச்சாலை அதிகாரிகள், மேலிடத்துடன் தொடர்பு கொண்ட பின்னரே இது பற்றி அறிவிப்பதாகத் தெரிவித்தனர்.

அதன் பின்னர் மேலிடத்துடன் சிறைச்சாலை அதிகாரிகள் தொடர்பு கொண்டனர்.

விசாரணைகள் முடிந்த பின்னர் கல்லடி ஆயுதபடை முகாம், மட்டக்களப்பு பொலீஸ் நிலையம் ஆகியவற்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று கருதப்படும் சுமார் 800 தமிழர் சிறைச் சாலைக்கு இடமாற்றம் செய்யப்படுவர் என்றும் தெரிகிறது.

பின்னர் படிப்படியாக பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு வாசிகளும் மட்டக்களப்பு சிறைக்கு கொண்டுவரப்படுவர் என்று கூறப்படுகிறது.

சிறைச்சாலையின் பாதுகாப்பைப் பலப்படுத்த அருகில் அதிரடிப்படையின் மினி முகாம் ஒன்று அமைக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது (உ-எ-21)

## அம்புலன்ஸ் கராஜில்!

யாழ்ப்பாணம்,ஜன.16

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக யாழ் ஆஸ்பத்திரி அம்புலன்ஸ் இன்னும் கராஜில்தான் தூங்குகிறது!

அரசு அறிவித்த பிரகாரம் கிளிநொச்சிக்கு அம்புலன்ஸை அனுப்புவதற்குத் தேவையான எரிபொருள் ஆஸ்பத்திரியில் இல்லை.

அப்படி அம்புலன்ஸ்கிளிநொச்சிக்கு அனுப்பப்பட்டாலும் கிளிநொச்சியில் அரசு கூறியபடி எரிபொருள் இல்லை.

இந்த இரண்டு காரணங்களுக்காகவுமே ஆஸ்பத்திரி அம்புலன்ஸ் கராஜில் தூங்குகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

# கொட்டடியில் சைக்கிளில் சென்றவர்மீது சூடு!

யாழ்ப்பாணம், ஜன, 16

சைக்கிளில் சென்றவர்கள் மீது சிப்பாய்கள் சுட்டதில் ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுப்பகல் இரண்டு மணி அளவில் கொட்டடி, ஆஸ்பத்திரி வீதியில் உள்ள சென்றல் கிளினிக் அருகாமையில் இச்சம்பவம் நடைபெற்றது.

காயமடைந்தவர் சோனக தெருவைச் சேர்ந்த சேனு பரீத் மூசட்டா (22 வயது) என்பவராவர்.

நேற்றுப் பகல் இரண்டு மணி அளவில் மேற்படி கிளினிக் திறந்திருக்கிறதா என்பதைப் பார்க்க சைக்கிளில் வேறு ஒருவருடன் சென்றபோதே இவருக்குச் சூடு விழுந்தது.

இரண்டு காலிலும் இடுப்பிலும் பலத்த காயங்கள் ஏற்பட்ட நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார்.

## சுபநேரம்

16—01—1987
வெள்ளிக்கிழமை

சுபநேரம்:
6. 34 முதல் 8. 04 வரை
ராகுகாலம்:
11.04 முதல்12.34 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

# 'பவ்வல்' வாகனம் விடுதலைப்புலிகள் வசம்

மன்னார், உயிலங்குளத்தில் நடந்த நிலக்கண்ணி வெடித் தாக்குதலில் சிக்கிய தென்ஆபிரிக்கத் தயாரிப்பான ''பவ்வல்'' கவச வாகனத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் மீட்டு எடுத்து தம்வசம் வைத்துள்ளனர்.

நிலக்கண்ணி இந்த வாகனத்தின் நடுப்பகுதியைத்தான் தாக்கியது. சிறு சேதங்களைத் திருத்திய பின்னர் இந்தப் 'பவ்வல்' வாகனம் பாவிக்கக்கூடியதாக இருக்கும் என்று புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

(முன்னர் வந்த செய்தி 2ஆம் பக்கத்தில்)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சின்னஞ் சிறு விளம்பரங்கள் ★

## தேவை

அச்சகம் ஒன்று செயற்படுவதற்கு யாழ். பெருமாள் கோவிலடி, மனோஹரா தியேட்டர் சந்தி, கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ் இந்துக்கல்லூரி ஆகியவற்றை அண்டிய பகுதியில் ஏதேனும் ஓர் இடத்தில் வசதியான வீடு தேவை. உடன் தொடர்பு கொள்க:- விளம்பர இல: 50, மே/பா. உதயன், தபால்பெட்டி இல 23, யாழ்ப்பாணம்.

புதிதாக ஆரம்பிக்கப் படவிருக்கும் நூலகத்திற்கு அனுபவமுள்ள நூலகர் உடன் தேவை. விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: விளம்பர எண். 48, மே/பா. உதயன். யாழ்ப்பாணம்.

பத்திரிகை நிறுவனம் ஒன்றுக்கு ஓவியர் தேவை. ஆற்றல், அனுபவம் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். விளம்பர எண்: 47, மே/பா. உதயன், யாழ்ப்பாணம்.

அனுபவம் வாய்ந்த தொலைபேசி இயக்குநர் (இரவில் கடமையாற்றுவதற்கு) உடன் தேவை. அனுபவ விபரங்களுடன் முழுமையான விண்ணப்பத்தை அனுப்புமபடி வேண்டப்படுகின்றனர். விளம்பர எண்: 49. மே/பா. உதயன், யாழ்ப்பாணம்.

அச்சுக் கோர்ப்பவர்கள், மெஷின் அடிப்பவர்கள், பயிலுநர்கள் உடன் தேவை. 18-01-1987 ஞாயிறு நேரில் வரவும். அம்பிகா அச்சகம், இந்துக் கல்லூரியடி, உரும்பராய்

# பதில் அதிபர்களின் பதவி நிரந்தரமாகும்

கொழும்பு, ஜன.16

பதில் அதிபர்கள், பொறுப்பாசிரியர்கள், பிரிவுத் தலைவர்கள் ஆகியோரை நிரந்தரமாக்கி பாடசாலையின் தரத்துக்கு ஏற்ப அதிபர்களுக்கான பதவி உயர்வை வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி கல்வி அமைச்சருக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கு இணங்க 1980 ஏப்ரல் 30 ஆம் திகதியிலிருந்து பதில் அதிபர்களாகப் பதவி வகித்து பதவி உயர்வு வழங்கும்போது தவறுதலாக விடப்பட்ட 943 பேருக்கும் பதவி உயர்வு வழங்கவும் அமைச்சரவை அமைச்சருக்கு அனுமதி வழங்கியது.

இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் இது சம்பந்தமாக அமைச்சர் ரணில் விக்கிரமசிங்காவுக்குச் சமர்ப்பித்த மகஜர் ஒன்றைத் தொடர்ந்தே அமைச்சர், அமைச்சரவைக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்து அனுமதி பெற்றார்

நேர்முகப் பரீட்சையில் கூடுதல் புள்ளி பெறுவோருக்கு பதவி உயர்வு வழங்கப்படும் ஆண்டுதோறும் எத்தனை பேருக்கு பதவி உயர்வு வழங்கப்படும் என்பதை அமைச்சு முடிவு செய்யும்

கல்விச் சேவையின் இரண்டாந் தர பதவி உயர்வு இம்மாதம் 20 ஆம் திகதி முடிவாக்கப்படும். மாத இறுதிக்குள் பதவி உயர்வு பெறுவோர் பட்டியல் வெளியிடப்படும் (முதலாந் தரத்துக்கான பட்டியல் கடந்த ஆண்டு வெளியிடப்பட்டது தெரிந்ததே)

உயர்தரப் பாடசாலை ஒன்றின் அதிபராக இருக்கும் குறைந்த தர அதிபர்களுக்கு, பாடசாலை தரத்துக்கு ஏற்ப சேவை அடிப்படையில் பதவி உயர்வு வழங்கப்படும்.

பல ஆண்டுகள் உதவி ஆசிரியராகச் சேவை செய்தும் பதவி உயர்வு பெறாதோருக்கு சேவை மூப்பின் விசேட அடிப்படையிலும் திறமை அடிப்படையிலும் பதவி உயர்வு வழங்கப்படும்.

எதுவித தரமும் இன்றி 1980 ஏப்ரல் 30ஆம் திகதிக்குப் பின்னர் அதிபர்களாகவும் பதில் அதிபர்களாகவும் பொறுப்பாசிரியர்களாகவும் பிரிவுத் தலைவர்களாகவும் நியமிக்கப்பட்டிருப்போர்களுக்கு பரீட்சை, நேர்முகப் பரீட்சை நடத்தி விசேட புள்ளிகள் வழங்கப்பட்டு பதவி உயர்வு வழங்கப்படும்.

இதிலும் அவர்களுடைய சேவை மூப்பு, தராதரம், விசேட பயிற்சிகளில் அல்லது கருத்தரங்குகளில் பங்குபற்றியமை ஆகியவற்றின் அடிப்படையில் மேலதிக புள்ளிகள் நேர்முகப் பரீட்சையின்போது வழங்கப்படும்

சேவையில் இருந்து கொண்டே தமது தராதரத்தைக் உயர்த்திக் கொண்டவர்களுக்கு தராதரப்பத்திரம் வழங்கப்பட்ட திகதியில் இருந்து சம்பளமும்—புதிய நியமனமும் வழங்கும்படி இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் விடுத்த வேண்டுகோளை கல்வி அமைச்சு ஏற்றுக் கொண்டுள்ளது

அதற்குரிய விபரங்கள் அனைத்தையும் திரட்டிய பின் சகல கல்விப்பணிப்பாளர்களுக்கும் இது பற்றி அறிவிக்கப்படவுள்ளது.

குறிப்பிட்ட தீர்மானங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக- திறைசேரியின் பண ஒதுக்கீடு கிடைப்பதில் தாமதம் ஏற்படாமல் தவிர்ப்பதற்கு- நிதியமைச்சர் திரு. ரொனி டீ மெல் பணிப்புரை வழங்கியுள்ளார்.

இலங்கை ஆசிரியர் காங்கிரஸின் கோரிக்கைகளை ஏற்று உடன் நடவடிக்கைகளை மேற்கொண்ட கல்வி அமைச்சருக்கு காங்கிரஸ் செயலாளர் திரு கே. சிவஞானம் நன்றி தெரிவித்துள்ளார். (உ-எ-119)

## சுந்தர் பிரியாவிடைச் செய்தி

பலாலி ஜன.16

ஒழுங்காகவும், நேர்மையுடனும் ஓடிக்கொண்டிருக்கும் யாழ்ப்பாணத்துக்கல்வியாறு செல்லும் வேகத்துடன், அதன் திசைக்கேற்ப செல்வதே கல்வியாளனுடைய கடமை ஆகும். அதற்கெதிரான திசையால் செல்வது ஆரோக்கியமான கல்விச் சூழலுக்கும் எமது கல்விப்பண்பாட்டுப் பாரம்பரியத்துக்கும் எவ்விதத்திலும் பொருந்தாது.

யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளராகக்கடமையாற்றி மாற்றலாகி கிளிநொச்சி-முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு செல்லும் திரு இரா. சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் கல்விப் பணிமனையில் தனது இறுதி நாட்டமையை முடித்துக்கொண்டு வெளியேறும்போதே எமது செய்தியாளரிடம் அவர் இப்படித் தெரிவித்தார். (இ-119)

# தீவுப்பகுதியில் நோய்த் தடுப்பு நடவடிக்கை

புங்குடுதீவு, ஜன 16

தீவுப்பகுதியில் பரவி வரும் மலேரியா, மூளைக் காய்ச்சல், சொறி, சிரங்கு ஆகிய தொற்று நோய்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்சுகாதார சேவை அத்தியட்சரின் பணிப்புரைக்கமைய தீவுப்பகுதியில் உள்ள சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநலசேவையாளர்கள், வைத்திய அதிகாரிகள் அனைவரும் இதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

அண்மையில் ஊர்காவற்றுறையில் தீவுப்பகுதி வைத்திய சுகாதார அதிகாரியின் பணிமனையில் இது தொடர்பான விசேட ஆலோசனைக்கூட்டமொன்றும் நடைபெற்றது

இக்கூட்டத்தில் யாழ் சுகாதார சேவை அத்தியட்சகர் டாக்டர் என். கனகசபை, தொற்று நோய்த்தடை அதிகாரி டாக்டர். எஸ். விஜயராசா, சுகாதாரக்கல்வி போதனாசிரியர் திரு கே. வைத்தீஸ்வரன் ஆகியோருட்படப் பலர் கலந்து கொண்டனர்.

தீவுப்பகுதி வைத்திய சுகாதார அதிகாரி டாக்டர் திருமதி. கு. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தீவுப்பகுதியில் விசர் நாய்கடித் தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்துவதென்றும்-

பரவி வரும் தொற்று நோய்களைத் தடுப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுவதென்றும். முடிவு செய்யப்பட்டுள்ளது. (உ-131)

## நாளை ஓவிய அரங்கம்

யாழ்ப்பாணம், ஜன. 16

கலை இலக்கிய களத்தின் ஆறுவது ஒன்றுகூடல் நிகழ்ச்சி ஓவிய அரங்கமாக நிகழும்.

நாளை சனிக்கிழமை மாலை 2-00 மணிக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் கலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமையில் இந் நிகழ்ச்சி நடைபெறும்.

யாழ் மாவட்ட பாடசாலைகளில் ஓவிய கண்காட்சியில் தெரிவு செய்யப்பட்டவை ஓவிய அரங்கில் இடம்பெறும். அரங்கை மகாஜனா கல்லூரி அதிபர்திரு.க நாகராஜா ஆரம்பித்துவைப்பார்.

ஈழத்தின் முதுபெரும் ஓவியக் கலைஞர்கள் திரு. கே கனகசபாபதி, திரு. ஏ இராசையா ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

கலாநிதி நா. சுப்பிரமணியம் இதற்கான ஏற்பாடுகளை கவனித்துள்ளார். (உ-9)

## தையற் பயிற்சி

புங்குடுதீவு, ஜன.16

புங்குடுதீவு இருப்பிட்டி ஐங்கரன் சனசமூக நிலையத்தின் ஆதரவில் தையற் கலைப் பயிற்சி வகுப்பொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத் தையற் பயிற்சி வகுப்பில் படித்த யுவதிகள் பலர் தையற் கலை பயின்று வருகின்றனர். (உ-131)

## உயிரிழப்புப் பற்றி சிந்திக்காத நிலைமை இன்று

### பிரதியமைச்சர் கவலை

அம்பாறை, ஜன. 16

மனித உயிரிழப்பு பற்றி சிந்திக்காத ஒரு நிலையை மனிதன் இன்று அடைந்து விட்டான்

இப்படி பிரதியமைச்சரும் சம்மாந்துறை எம்.பியுமான ஜனாப் அப்துல் மஜீது தெரிவித்தார்.

அக்கரைப்பற்று முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இலவச பாடப் புத்தக விநியோக வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையில் ஜனாப் அப்துல் மஜீது முன்னண்டவாறு கவலை தெரிவித்தார்.

கொள்கைகளை நிறுத்த அனைவரும் முயற்சிக்க வேண்டும் வன் செயல்களினால் வளர்ச்சித் திட்டங்கள் தடைப்படுகின்றன. சமாதானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க நான் தயாராக உள்ளேன்—

—இப்படி ஜனாப் மஜீது தெரிவித்தார். (உ-எ-14)

## மணிமண்டபம் திறப்பு விழா

கொடிகாமம், ஜன 16

கொடிகாமம் அரசினர் திருநாவுக்கரசு மகா வித்யாலய அபிவிருத்திச் சபையினதும், பொது மக்களினதும் பெரும் பங்களிப்பால் ஒரு லட்சத்து இருபதினாயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மணி மண்டபம் இன்று 11 மணியளவில் கல்வித் திணைக்களப் பிரதம கல்வி அதிகாரி திரு கு. சோமசுந்தரத்தால் திறந்து வைக்கப்படவுள்ளது.

அபிவிருத்திச் சபைச் செயலாளர் டாக்டர் எவ் ஏ ரூகல இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

அதிபர் திரு சே. பேரம்பலம் தலைமையில் இந்நிகழ்ச்சி நடைபெறும். (உ-75)

## கருத்தரங்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 16

பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் யாழ் மறை மாவட்டப் பொது நிலையினரால் 17, 18 ஆம் திகதிகளில் நடத்தப்பட இருந்த கருத்தரங்குகள் பின்போடப்பட்டுள்ளன.

கருத்தரங்கு நடைபெறும் புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என சபைச் செயலாளர் திரு மோ. தார்சிஸிடஸ் தெரிவித்துள்ளார். (உ- 5)

## எரிபொருள் தடை கிழக்கிலும் வரலாம்

### வேல்முருகு எச்சரிக்கிறார்

அம்பாறை, ஜன 16

கிழக்கிலும் எரிபொருள் தடை வரக்கூடிய ஆபத்து உண்டு என்று கல்முனைப் பிரசைகள் குழுத் தலைவர் திரு. ஆ. க. வேல்முருகு எச்சரித்திருக்கின்றார்.

வட பகுதி மீதான எரிபொருள் தடை பற்றி கருத்துத் தெரிவிக்கையில் திரு. வேல்முருகு-

"அரசின் இந்த நடவடிக்கை மனிதத் தன்மை அற்றது

இது போன்ற ஒரு நடவடிக்கையை அரசு கிழக்கில் எடுக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம்?" என்று கேட்டார். (உ-எ-14)

## மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

## ஒட்டுசுட்டான் மோதலில் சிப்பாய் பலி!

கொழும்பு,ஜன 16

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் ஆயுதப்படை முகாமைவிட்டு வெளியே வந்த சிப்பாய்கள் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த திங்கள் நடத்திய தாக்குதலில் ஒரு சிப்பாய் உயிரிழந்தார்

அச்சிப்பாயின் பெயர் ஜயரத்தின, கொழும்பு நுட்டப்பிரிவைச் சேர்ந்தவர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-ஐ-எ)

## பிரசைகள் குழு விவரம் கோருகிறது

அம்பாறை, ஜன 16

காணமற் போனவர்கள், சுட்டுக் கொல்லப்பட்டவர்கள், தேடப்படுபவர்கள் ஆகியோரது விவரங்களை சம்பந்தப்பட்டவர்கள் தந்துதவ வேண்டும்.

கல்முனை பிரசைகள் குழு இவ்வாறு கோரியுள்ளது

இது சம்பந்தமான பட்டியல் ஒன்றைத் தயாரித்து மேல் நடவடிக்கை எடுக்கவே இந்த விவரங்கள் தேவைப்படுவதாகவும் பிரசைகள் குழு தனது வேண்டுகோளில் தெரிவித்துள்ளது. (இ-எ-14)

அமெரிக்க கூலிப்படை விவகாரம்:

# இலங்கை அரசுக்கு வேறு உள் நோக்கம்

### தூதுவர் டிக்ஸிற் அறிக்கை

கொழும்பு, ஜன. 16

அமெரிக்கக் கூலிப் படையினர் குறித்து இந்தியா தெரிவித்த கவலையைப்பற்றி இலங்கை அரசு கண்டனம் தெரிவித்ததின் பின்னணியில் வேறு நோக்கம் இருக்க வேண்டும்

இப்படி இந்தியத் தூதர் திரு ஜே. என். டிக்ஸிற் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது

அமெரிக்கக் கூலிப் படை இலங்கையில் இருப்பது குறித்து இந்தியா அமெரிக்காவிடம் கவலை தெரிவித்த சம்பவம் தொடர்பாக பிரதி வெளி நாட்டமைச்சர் திரு. டிரோன் பெர்னாண்டோ, திரு. டிக்ஸிற்றை அழைத்து இலங்கையின் ஆட்சேபனையைத் தெரிவித்துக் கொண்டார் என்ற செய்தி உதயனில் ஏற்கனவே வெளிவந்தது.

இச் சந்திப்புத் தொடர்பாக இந்தியத் தூதரகம் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;

இலங்கையின் குற்றச்சாட்டுக்களை இந்தியத் தூதர், பிரதி அமைச்சர் முன்னிலையில் வைத்தே உடனடியாக நிராகரித்தார்.

இந்தியாவின் கருத்து தீவிரமான ஆலோசனையின் பின்னரே வெளியிடப்பட்டது.

இந்தக் கருத்தே அமெரிக்காவிடம் இந்தியாவினால் வெளியிடப்பட்டது.

இனப் பிரச்சினையைத் தீர்க்க இந்தியப் பிரதமருக்கு வெளியுறவுச் செயலாளர் உதவ வேண்டும் என்று இலங்கை கூறியிருப்பது இலங்கையின் விளங்காத் தன்மையைக் காட்டுகிறது

பிரதமருக்கும் வெளியுறவுச் செயலாளருக்கும் இடையே ஏதோ கருத்து வேறுபாடுஉள்ளது என்ற எண்ணத்தை உருவாக்குவதுபோல் இது அமைந்துள்ளது.

இதற்கு பின்னணியில் வேறு நோக்கம் இருக்க வேண்டும் போன்று தெரியவருகிறது

-இப்படி இந்தியத் தூதரக அறிக்கை தெரிவித்தது. (உ-எ)

# தள்ளாடியில் கண்ணி வெடி

### 5 சிப்பாய்கள் பலி

யாழ்ப்பாணம், ஜன. 16

மன்னார் தள்ளாடி முகாமில் இருந்து கவச வாகனங்களுடன் வெளியே வந்த சிப்பாய்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் நவீன தரைக் கண்ணி வெடிக்கு இலக்கானார்.

இதில் 5 சிப்பாய்கள் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

தரைக்கண்ணி வெடிக்கும் அசையாது என்று கருதப்பட்ட தென் ஆபிரிக்கத் தயாரிப்பான 'பவ்வலோ' கவச வாகனம் சுக்குநூறாகியது.

கவச வாகனம் சிதறுண்டதும் பின்னால் வந்த வாகனங்கள் தள்ளாடி முகாமை நோக்கியும் முன்னால்சென்றவாகனங்கள் முருங்கன் முகாமை நோக்கியும் சென்றன.

கடந்த புதன் காலை இச்சம்பவம் இடம் பெற்றது. (உ-எ)

## புதிய கட்டடம்

புங்குடுதீவு, ஜன. 16

புங்குடுதீவு வல்லன் ஸ்ரீ சண்முகநாதன் வித்தியாலயத்தில் சுமார் 50ஆயிரம் ரூபா செலவில் புதிய கட்டடமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இவ் வித்தியாலயப் பெற்றோர்களது நிதியுதவியுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் தங்கள் சுயமுயற்சியின் மூலம் இக் கட்டடத்தை அமைத்துள்ளனர்.

இப் புதிய கட்டடம் வெகு விரைவில் திறந்து வைக்கப்பட விருக்கிறது. (உ-131)

## தைப்பொங்கலன்று காரைதீவில் 50பேர் கைது

அம்பாறை, ஜன 16

தைப்பொங்கல் அன்று நடந்த தேடுதல் வேட்டையின்போது சுமார் 50 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் காரைதீவுக் கிராமத்தில் அட்டப்பள்ளம் என்னும் பகுதியில் இடம்பெற்றது. ... ஒன்றுவட்டப் ஆயுதப் படையினர் வீடுவீடாகச் சென்று தேடுதல் நடத்தினர்.

பலரை விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

இதனால் பொங்கலுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்த பல தமிழ்க் குடும்பங்கள் ... கைப்பலையுமாயின. (உ-எ-14)

## தென்னிலங்கையில் வெளியிடப்பட்ட புத்தகம்

கொழும்பு,ஜன 16

தென் இலங்கை அரசியல்வாதியான திரு. பிரின்ஸ் குணசேகரா எழுதியுள்ள ஒருசிங்களப் புத்தகம் கொழும்பில் வெளியிடப்பட்டிருக்கிறது.

அப் புத்தகத்தின் பெயர் சிங்களயாமோடயா தெர ஜயவர்த்தனயுகே பராஜயே'

இதன் தமிழாக்கம் "சிங்கள மடையர்கள் அல்லது ஜயவர்த்தனா சகாப்தத்தின் அழிவு"

திரு பிரின்ஸ் குணசேகரா ஒரு சட்டத்தரணியாவார் (இ-ஐ-எ)

## எரிபொருள் தட்டுப்பாட்டின் விளைவு

# பெண் பயணிகளுக்கு மினிபஸ்ஸில் அவஸ்தை

யாழ்ப்பாணம், ஜன. 16

எரிபொருள் தட்டுப்பாட்டைத் தொடர்ந்து மினிபஸ்ஸில் பயணம் செய்யும் பெண்கள் பெரும் அவஸ்தைகளுக்குள்ளாக வேண்டியுள்ளது.

மினிபஸ் சேவைகள் தற்போது குடாநாட்டுக்குள் குறைவாக நடப்பதால், பஸ்களுக்குள் பயணிகள் நெரிபட்டு பயணம் செய்ய வேண்டியுள்ளது.

மூன்று பஸ்களில் ஏற்ற வேண்டிய பயணிகளை ஒரு பஸ்ஸிலேயே ஏற்ற வேண்டியுள்ளது.

இதனால் பெண் பயணிகள் பஸ் நெருக்கத்தால் இம்சைகளுக்குள்ளாக நேரிடுகின்றது.

பல பெண் ஊழியர்கள் இதன் காரணமாக தமது அலுவலகங்களுக்கு செல்வதை இடைநிறுத்தியுள்ளனர்

பிரதான பஸ் நிலையங்களில் பயணிகளை ஏற்றும் போது பெண்களுக்கு முன்னுரிமை அளிக்க மினிபஸ்காரர் தவறுகின்றனர்.

இபோச பிரதான பஸ் நிலையத்தில் உள்ளது போன்று பயணிகள் வரிசையாக வந்து பஸ்ஸில் ஏறுவதற்கான வசதிகள், மினிபஸ் நிலையத்தில் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-5)

பிரயாண ஒழுங்குகள்

● நோர்வே ● லண்டன்
● ஜேர்மனி ● சிங்கப்பூர்
● அவுஸ்திரேலியா
● சவூதி அரேபியா

ஆகிய நாடுகளுக்கான உங்கள் பிரயாண ஒழுங்குகளை உடனுக்குடன் செய்துகொள்ள உடனடியாக எமது அலுவலகத்தில் சந்தித்து பதிவு செய்து கொள்ளவும்.

அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்!

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

TRI STAR TRAVELS

றை ஸ்ரார் றவல்ஸ்

இல 6,நவீன சந்தை (மேல் மாடி), யாழ்ப்பாணம்.

மு.கு. யாழ்நகர் நிலைமை சீரற்று எமது அலுவலகம் மூடப்பட்டிருந்தால் உங்கள் நன்மைகருதி ஏற்பாடு செய்யப்பட்ட கீழ்வரும் முகவரிகளில் தொடர்புகொள்ளவும்.

1. 71, குருசோ வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
2. வ. குகராசா, மயிலியற்புலம், கந்தசாமி கோவிலடி, அராலி வடக்கு
3. ந. தயாளன், மயிலணி வடக்கு, சுன்னாகம்.

புத்தகசாலை இடம் மாற்றம்

தற்போதைய நிலைமை காரணமாக எமது வியாபார நிலையம் தற்காலிகமாக கீழ் காணும் முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவர்களுக்கும் அறியத்தருகிறோம்.

All Ceylon Distributors
(SAMUDRA TRADES LTD)
23/2 Stanley Road, JAFFNA
(மக்கள் வங்கி அருகாமையில்)

யாழ்கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

ஆண்டு 6 (தரம் 5) பிரவேச அனுமதி

விண்ணப்ப முடிவு திகதி: 25-1-87
பரீட்சைத் திகதி: 1-2-87
பாடங்கள்: கணிதம், தமிழ்

அதிபர்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

"நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாயின் என்னைப் பின்பற்றுவீர்களாக. அல்லாஹ் உங்களை நேசிப்பான் என்று கூறுக.

— அல்குர்ஆன் 3:31

உதயன்
உண்மை - நேர்மை - நடுநிலைமை

இல,15, 2ஆவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் 16-01-1987
தொலைபேசி: 24805, 22073
த. பெ இல 33

## ஏன் இந்த அவசரம்?

அமெரிக்கக் கூலிப்படையினர் இலங்கை அரசப்படையினருக்கு உதவுவது குறித்து இந்திய வெளியுறவுச் செயலாளர் அமெரிக்காவிடம் கவலை தெரிவித்திருந்தார் அல்லவா?

அது இலங்கைக்குப் பிடிக்கவில்லை. வெங்கடேஸ்வரனின் கருத்துக்கு இலங்கை அரசு ஆட்சேபம் தெரிவித்திருக்கிறது. கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் திரு டிக்ஸிற்றை வெளிவிவகார அமைச்சுக்கு அழைத்து பிரதி வெளிநாட்டு அமைச்சர் திரு. டிரோன் பெர்னாண்டோ கண்டனக்குறிப்பு ஒன்றையும் கையளித்திருக்கிறார்.

திரு. வெங்கடேஸ்வரன் அமெரிக்கக் கூலிப்படையினர் குறித்துக் கவலை தெரிவித்தது அமெரிக்காவிடம் தான். இலங்கையிடம் அல்ல. அது குறித்து இலங்கைக்கு "சுருக்கென"க் கோபம் வந்தது ஏனோ தெரியவில்லை!

குற்றமுள்ள நெஞ்சமே குறுகுறுக்கும் என்பது முதுமொழி. இந்திய வெளியுறவுச் செயலாளர் தெரிவித்த கவலை இந்திய அரசின் கவலை என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

இந்தியாவின் கவலைக்கு ஆட்சேபமோ, மறுப்போ தெரிவிக்கவேண்டிய கடமை அமெரிக்காவையே சார்ந்தது. இலங்கை வேண்டுமானால் அமெரிக்கக் கூலிப்படையினர் தமக்கு உதவி செய்கிறார்களா, இல்லையா என்பதைத் தெளிவுபடுத்தி விளக்கி இருக்கலாம். ஆட்சேபம் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. அதைச் செய்திருக்க வேண்டியவர்கள் அமெரிக்க ராஜாங்க அமைச்சு அதிகாரிகள்.

இலங்கை இவ்விஷயத்தில் முந்திரிக் கொட்டைபோல முந்திக்கொண்டதன் மூலம் ஒரு சந்தேகம் எழுந்திருக்கிறது.

அதாவது இந்தியாவைச் சாடுவதற்கு சந்தர்ப்பம் பார்த்து இலங்கை காத்திருக்கவேண்டும். "வெறுவாய் சப்பியவனுக்கு கிடைத்த அவல்" மாதிரி வெங்கடேஸ்வரனின் கூற்று அதற்கு வாய்த்திருக்க வேண்டும்.

நாம் நினைத்தவர்களைக் கூலிக்கு அமர்த்துவோம், வேண்டியவர்களிடம் இருந்து ஆயுதங்களை வாங்குவோம். நீ யார் எங்களைக் கேட்பதற்கு? — என்ற தொனியில் இந்தியா மீதான கண்டனக் குறிப்பு அமைந்திருக்கிறது.

ஆனால் இலங்கை எதைச் செய்கிறது எப்படிச் செய்கிறது என்பதை 'நோட்டம்' விட வேண்டிய அவசியம் இந்தியாவுக்கு உண்டு. அதுவும் இலங்கையின் இராணுவ விவகாரங்கள் குறித்து அவதானிக்க வேண்டிய பொறுப்பும் இந்தியாவுக்கு உண்டு எனலாம்.

காரணம் வேறு ஒன்றுமல்ல. இலங்கை இராணுவத் தீர்வு இல்லாமல் சமாதான வழி மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்புவதாகவே இந்தியாவிடம் கூறியது. அதனாலேயே இந்தியா இனப்பிரச்சினையில் மத்தியஸ்தம் வகிக்க முன்வந்தது.

இலங்கை இராணுவ பலத்தை அதிகரிக்கிறது அல்லது இராணுவத் தீர்வு காண முயல்கிறது என்றால் இந்தியாவுக்குக் கொடுத்த வாக்குறுதியை மீற முனைகிறது அல்லது மாற முயற்சிக்கிறது என்பது அர்த்தமாகும்.

அப்படி இலங்கை மாற முயற்சிக்கிறது என்று காணும் பட்சத்தில், மத்தியஸ்தத்தில் இருந்து விலகிக் கொள்வது குறித்து முடிவு செய்ய இலங்கை நிலைமையை அவதானிக்க வேண்டிய அவசியம் இந்தியாவுக்கு உண்டு எனலாம்.

எனவே வெங்கடேஸ்வரனின் கூற்று, இலங்கை ஆட்சேபம் தெரிவிக்கக் கூடிய ஒன்றல்ல. இதனை உணராமல் இலங்கை அவசரப்பட்டது ஏனோ?

இலங்கை- இந்திய ராஜீக உறவுகள் அடிக்கடி சூடாவதும் பின்னர் தணிந்து குளிராவதும் கடந்த நான்கு வருடங்களாக வழமையான போக்காகி விட்டது.

இலங்கையின் இப்போதைய ஆட்சேபமும் கண்டனமும் அவற்றில் ஒன்றாகவே கருதப்பட வேண்டும். ஆனால் இந்தியா இதனை எந்த விதத்தில் நோக்கும் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

## நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஜன. 16

நாடாளுமன்றசிரேஷ்ட அறிக்கையாளர் செல்லப்பா நடராசாவின் "எனது நோக்கில் இலங்கைப் பாராளுமன்றம்" என்ற நூல் அறிமுக விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோவிலில் நடைபெறவுள்ளது.

திரு சி திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்கு, துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

திரு. எஸ் திருச்செல்வம் நூல் அறிமுகவுரையையும், திரு அ பஞ்சாட்சரம், திரு. இ. சிவகுருநாதன், திரு இ. பொ குமாரசாமி, திரு.எம். எஸ். ஸ்ரீதயாளன் ஆகியோர் மதிப்புரைகளும் வழங்கவுள்ளனர்.

கொழும்பு தமிழ்ச் சங்கம் இந்த நூலை வெளியிட்டுள்ளது.

நூல் அறிமுக விழாவில் மிருதங்கமணி எம். என் செல்லத்துரையின் மாணவர்களின் மிருதங்க இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (உ-5)

# ரஷ்ய - அமெரிக்க பிரதிநிதிகள் சந்திப்பு

## அணு ஆயுத போர் அபாயத்தை தடுப்பது குறித்துப் பேச்சு

ஜெனிவா, ஜன 15

அணு மற்றும் விண்வெளி ஆயுதங்கள்பற்றி அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்குமிடையிலான புதிய பேச்சுவார்த்தைகள் இன்று ஜெனிவாவில் ஆரம்பமாகின்றன.

இருநாடுகளுமே ஏற்கனவே பங்குபற்றிய பிரதிநிதிகளிலும் பதவி உயர்வு உடையவர்களை இம்முறை பேச்சுவார்த்தைகளுக்காக அனுப்பி வைத்துள்ளதாகஅறிவித்துள்ளன.

பேச்சுக்களில் முன்னேற்றம் அடைவதற்கு இரு நாடுகளும் காட்டும் ஆர்வத்தை இது காட்டுகின்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே நேட்டோ தலைவர்களுக்கு விபரங்களை தெரிவிப்பதற்கு பிரேசியல்ஸ் போய்ச் சேர்ந்த அமெரிக்க பிரதிநிதிகள் குழுத்தலைவர் கம்பெல்மன் தாமாகவே முன்வந்து நடவடிக்கை எதையும் எடுக்கப்போவதில்லை எனவும் மாஸ்கோ அடுத்த நடவடிக்கை எடுக்கும்வரை அமெரிக்கக் குழு காத்திருக்கும் என்றும் தெளிவாகக் கூறினர்.

இதற்கிடையே ஏதேச்சையான அணு ஆயுத போர் அபாயத்தை குறைப்பதற்கான புதிய பாதுகாப்பு நடவடிக்கை பற்றியும் அமெரிக்கா ரஷ்யாவுடன் பேச்சு நடத்தும் எனவும் அறிவிக்கப்பட்டது (ஒ)

### பர்னாலாவுக்கு ராஜீவ் அழைப்பு

புதுடில்லி, ஜன. 15

பஞ்சாப் மாநிலப் பிரச்சினை பற்றி முழு அளவிலான பேச்சுக்களை நடத்த புதுடில்லி வருமாறு பஞ்சாப் மாநில முதலமைச்சர் பர்னாலாவை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அழைத்திருக்கிறார் (இ-எ)

சுவிஸ் திருப்பியனுப்பவிருக்கும்

## 40தமிழர்களின்விவரம் ஐ. நா. அதிகாரி கோருகிறார்

ஐநா, ஜன 15

இலங்கைக்குத் திருப்பி அனுப்ப இருக்கும் 40 தமிழர்கள் குறித்து விவரங்களை உடனடியாகத் தரும் டி ஐ நா. அகதிகள் ஆணையாளர் சுவிஸ் அரசாங்கத்தைக் கோரியிருக்கிறார்.

திருப்பி அனுப்பப்படும் தமிழ் அகதிகள் கொழும்பில் துன்புறுத்தப்படுவார்களா? அல்லது அவர்களின் உயிர்களுக்குப் பாதுகாப்பு உள்ளதா?— இது குறித்து ஆராயவே இவ் விவரங்களை ஐ. நா. அகதிகள் ஆணைக்குழு, இக்கோரிக்கையை சுவிஸ் அரசுக்கு விடுத்துள்ளது. (உ-ஐ-எ)

## ஆப்கானிஸ்தானில் போர் நிறுத்தம் அமுல்

காபூல், ஜன.15

ஆப்கானிஸ்தான் அரசு ஒருதரப்பான போர் நிறுத்தத்தை அமுல்படுத்தியுள்ளது.

தேசிய சமரசத்திற்கும் வெளிநாட்டுப் படைகள் வெளியேறுவதற்கும் இது ஓர் ஆரம்ப நடவடிக்கை என ஆப்கான் ஜனாதிபதி நஜிபுல்லா தெரிவித்தார்.

இதன்படி ஆப்கானிஸ்தானின் சகல படைப் பிரிவுகளும் தத்தமது தளங்களுக்கு திருப்பி அழைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் ராணுவ கேந்திர நிலையங்களினதும் ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியின் பாதுகாப்புப் பணியிலும்தொடர்ந்தும் படையினர் ஈடுபட்டு வருவார்கள்எனவும் அறிவிக்கப்பட்டது. (ஒ)

### ராமராவின் புதிய திட்டம்

ஹைதராபாத், ஜன 15

தெலுங்கு தேசம் கட்சிக்கு நிதிசேகரிப்பதற்காக ஆந்திர முதலமைச்சர் என். டி.ராமராவ் மீண்டும் திரைப் படத்துறையில் ஈடுபட உள்ளதாக அறிவித்தார்.

தெலுங்கு தேசம் கட்சிக்கு 4 லட்சம் கடன் இருப்பதாகவும் அந்தநிதியைத் திரட்டுவதற்காக புதிய படம் ஒன்றை அவர் தயாரிக்க விருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## வெளி உலகில்

### புதிதாக எதையும் காமினி கொண்டுவரவில்லை — 'இந்து'வில் ரெட்டி தகவல்

புதுடில்லி, ஜன. 15

இந்திய மத்தியஸ்தம் தொடர்வதையே இலங்கை விரும்புகின்றது என்ற வெறும் உறுதியைத் தவிர, அமைச்சர் காமினி திஸநாயக்கா மூலம் புதிதாக ஒன்றும் அனுப்பப்படவில்லை.

பிரபல அரசியல் விமர்சகர் திரு. ஜி. கே. ரெட்டி "இந்து" நாளிதழில் முன்கண்டவாறு எழுதி இருக்கிறார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் விசேட தூதுவர் ... திரு. காமினி திஸநாயக்கா, இந்தியப் பிரதமரையும் சந்திப்பார்.

திரு. திஸநாயக்கா கிழக்கு மாகாணம் பற்றிய புதிய கருத்து ஒன்றைக் கொண்டு வந்து இருப்பதாகத் தெரிகிறது. ஆனால், அந்தப் புதிய கருத்தில் எதுவித முன்னேற்றமும் இல்லை. இந்திய மத்தியஸ்தம் தேவை என்ற வெறும் உறுதிமொழிதான் அதில் உள்ளது.

இப்படி திரு. ரெட்டி "இந்து"வில் தெரிவித்து இருக்கிறார். (உ-ஐ-எ)

### ராணுவ தினம்

புதுடில்லி, ஜன 15

இந்தியா முழுவதிலும் இன்று ராணுவ தினம் கொண்டாடப்பட்டது.

அதி நவீன நுட்பங்களைப் பயன்படுத்துவதில் ராணுவம் தீவிர முன்னேற்றம் அடைந்து வருகின்றது வேவுபார்த்தலின் அணு போர் முறை இரவுநேரத்தில் கண்டறியும் சாதனங்கள் தகவல் சேகரிப்பு ஆகியவற்றில் பெரும் முன்னேற்றத்தை இந்தியராணுவம்அடைந்துள்ளது.

ராணுவ தினத்தையொட்டி 359 சிப்பாய்களுக்கு வீரப்பதக்கம் வழங்கிய பின் உரையாற்றிய ராணுவ தளபதி ஜெனரல் சுந்தர்ஜீ இப்படித் தெரிவித்தார் (ஒ)

### ஈராக் பதில் தாக்குதல்

பக்தாத், ஜன.15

பக்தாத்தின் கிழக்குப் பகுதியில் ஈரான் நடத்திய தாக்குதலுக்குப் பதில் தாக்குதலை ஈராக் நடத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இந்தப்பதில் தாக்குதலில் பல ஈரானிய சிப்பாய்கள் கொல்லப்பட்டதாகவும் ஈராக் செய்தி வெளியிட்டது.

வளைகுடா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர ஐ நா. பாதுகாப்புச்சபையில் அமைச்சர்கள் நிலையிலான அவசரக் கூட்டம் ஒன்றிற்கு ஐ. நா. தலைமைச் செயலர் பெரஸ் டீ. கியூலர் அழைப்பு விடுத்துள்ளார். (ஒ)

### எல்லைச் காந்தி தடுப்பு

கராச்சி, ஜன.15

பாகிஸ்தானில் கலவரங்களால் பாதிக்கப்பட்டுள்ள சிந்து மாகாணத்திற்குள் பிரவேசிப்பதற்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவை மீறியதற்காக 97 வயதான எல்லை காந்தி அப்துல் கபார்கான் கராச்சி விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டார்.

சிந்து மாகாணத்தினுள் பிரவேசிக்கக் கூடாது என முன்றுமாத தடை விதிக்கபபட்ட அரசியல் வாதிகளில் கபார்கான் முக்கிய மானவர்.

கபார்கனின் மகனை பிரபல இடதுசாரி அரசியல்வாதி கான் வாலி கானும் சிந்துவினுள் பிரவேசிக்க முடியாதவாறு உத்தரவிடப்பட்டுள்ளது (ஒ)

### மாணவர்கள் முயற்சி

மானிப்பாய். ஜன. 16

நவாலி மகாவித்தியாலய மாணவர்கள் பாடசாலை வாரத்தை யொட்டி பல ஆக்கபூர்வமான செயற்பாடுகளை செய்துள்ளனர்.

பாடசாலை வாரத்தில் அவர்களுக்கு வெள்ளையடித்தல், வர்ணம்பூசுதல், கதிரை மேசைகள் திருத்தம் செய்தல், பயனுள்ள மரங்கள் நாட்டுதல் போன்ற காரியங்களில் மாணவர்கள் ஈடுபட்டனர்.

சிரமதான முறையில் நடத்தப்பட்ட இவ்வேலைகளால் ஆயிரக்கணக்கான ரூபாய்களை பாடசாலை சேமித்துக் கொள்ளக்கூடியதாக இருந்தது என அதிபர் திரு செ. கதிர்காமத்தம்பி தெரிவித்தார். (உ-90)

## செய்திக்கொத்து

### 5 பாடசாலைகளில் ஏழாம் வகுப்பு

புங்குடுதீவு, ஜன. 16

புங்குடுதீவில் உள்ள ஐந்து பாடசாலைகளில் இவ்வாண்டு முதல் எட்டாம் ஆண்டு வரை (ஏழாம் வகுப்பு வரை) வகுப்புகள் நடத்துவதற்கு யாழ்-கல்வித்திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

இதேவேளையில் இது வரை காலமும் ஐந்தாம் வகுப்பு வரை நடைபெற்று வந்த நான்கு பாடசாலைகளில் இவ்வாண்டு முதல் நான்காம் வகுப்பு வரையே நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவு ஸ்ரீ இராசஇராசேஸ்வரி வித்தியாலயம், றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிஷன் வித்தியாலயம், சேர். துரைசாமி வித்தியாலயம், இருபிட்டி அமெரிக்கன்மிஷன் வித்தியாலயம் ஆகிய ஐந்து பாடசாலைகளிலும் இவ்வாண்டு முதல் எட்டாம் ஆண்டு வரை வகுப்புகள் நடைபெறும். (உ-131)

### அதிபர்களிடம் வேண்டுகோள்

மானிப்பாய், ஜன. 16

பாடசாலைகளில் நடைபெறும் கொண்டாட்டங்கள் மிக நீண்ட நேரம் நடைபெறாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை பாடசாலை அதிபர்கள் மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு கல்வி அமைச்சின் செயலாளர் திரு. ஈ. எல். விஜேமான்ன சகல பாடசாலை அதிபர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-90)

### வருடாந்தப் பொதுக் கூட்டம்

வட்டுக்கோட்டை, ஜன. 16

சித்தன்கேணி கலைநகர் நேருஜீ மாதர் இராம அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் மாதர் சங்க மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை சங்கத் தலைவி திருமதி. கு. பரமேஸ்வரி தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவு நடைபெறுவதோடு முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்படவுள்ளன. (உ-161)

### மாணவர் சேர்ப்பு

வட்டுக்கோட்டை. ஜன 16

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இவ்வாண்டு பெருந்தொகையான மாணவர்கள் சேர்ந்துள்ளனர்

இக்கல்லூரியில் இவ்வாண்டு முதல் ஆறும் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வகுப்பிலும் பெருந்தொகையான மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். (உ-161)

### கதிரை மேசை களவு

வட்டுக்கோட்டை, ஜன. 16

அராலி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களது கதிரை, மேசைகள் களவாடப் பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இப் பாடசாலையில் இருந்த கதிரை, மேசைகள் விடுமுறை காலத்தில் திருடப்பட்டமையால் பாடசாலைத் தவணைத் தொடக்கத்தில் மாணவர்கள் பலர் நிலத்தில் இருந்து படிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது (உ-161)

### இஸ்லாமிய மன்றம்கண்டனம்

சாவகச்சேரி, ஜன. 16

வடபகுதி மக்களுக்கு எரிபொருள் தடை விதித்திருப்பதையிட்டு சாவகச்சேரி இஸ்லாமிய மறுமலர்ச்சி மன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை மனிதாபிமானமற்ற செயல் எனவும், மன்னிக்க முடியாதது எனவும் இம்மன்றம் தெரிவித்துள்ளது. (உ-31)

## பணத்தை விட்டுக் குணத்தைக் கொள்க!



'நாகரிக வாழ்க்கை' என்கின்றபெயரில் ஏதோ ஒன்றுக்கு ஆசைப்பட்டு கொண்டு இப்போது பல நல்ல வழிகளை விட்டு விட்டோமோ என்பதை நினைத்தால் தான் பரிதாபமாக இருக்கிறது.

நாகரிக மார்க்கத்தில் போய்க் கொண்டிருந்த மேல் நாட்டில் பலர் வாழ்க்கையின் நிறைவு இதில் இல்லவே இல்லை என்று சலிப்படைந்து நம்முடைய வேதாந்தம் பக்திமுறை இவற்றுக்குத் திரும்ப ஆரம்பித்திருக்கிறார்கள்.

நாமோ அநாதி காலமாக நமக்கு வந்துள்ள அற்புதமான பிதிர்ராஜிதத்தை அலட்சியம் செய்து, மேல் நாட்டுக்காரர்கள் வேண்டாம் என்று சுழித்துக்கட்டிடதை எடுத்துக் கொள்கிறோம்.

இத்தனை கோளாறுகளுக்கும் மூலம் பணமே பெரிதாகி விட்டதுதான். இனியாவது பணத்தில் பற்றுதலை விடவேண்டும். சத்குணங்களைச் சம்பாதிக்க பாடுபடவேண்டும்.

சங்கராச்சாரியார்

### ஞானக்கதிர்

அப்போது தான் ஜன்மா எடுத்த பலனை நாம் அடைந்து லோகத்துக்கும் உபகாரம் செய்தவர் ஆவோம்

### சீனிக்கப்பல்

யாழ்ப்பாணம், ஜன. 16

1150 மெற்றிக் தொன் சீனியுடன் 'ஜவா' என்ற சரக்குக் கப்பல் காங்கேசன் துறைமுகம் வந்துள்ளதுஎன உணவுத் திணைக்கள அதிகாரி திரு இராஜநாயகம் தெரிவித்துள்ளார் (உ-5)



### பொய்யாமொழி

குறள்.

காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்.

பொருள்.

விருப்பு, வெறுப்பு, அறியாமை ஆகிய இக் குற்றங்கள் மூன்றனுடைய பெயரும் இல்லாமல் அழிந்தால், துன்பங்கள் வாராமற் கெடும்.

## வாசகர் திருமுகம்

## தமிழ் மாணவர்களின் கல்வி படும்பாடு!

1986ம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக முதலாம் தவணையிலும் மூன்றும் தவணையிலுமே யாழ் மாவட்டத்திற்கு இலவசபாட நூல்கள் விநியோகம் நடைபெற்றது

1986 செப்டம்பரில் விநியோகிக்கப்பட்ட பாட நூல்களில் 5ஆம் வகுப்பு தமிழ் பாடநூல் பற்றி அதிபர்களால் ஆட்சேபனை கிளப்பப்பட்டது.

மொத்தம் அப்பாட நூலில் 44 பாடங்கள் இருக்கின்றன.

தமிழ் பிள்ளைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்ட அந்நூலில் தமிழர் கலாசாரம் பற்றி 6 பாடங்களே இருக்கின்றன. ஏனைய 12 பாடங்கள் வேறு கலாசாரங்களைப் பற்றியவவாகவே இருக்கின்றன. பொதுவான பாடங்கள் 26.

இந்நூலில் தமிழ் அறிஞர்களில் ஒருவருக்கு மட்டுமே இடம் தரப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலை முன் எப்பொழுதும் எழுந்ததில்லை.

1987 இல் 4 ஆம் வகுப்பு மாணவருக்கு வழங்கிய தமிழ் பாட நூலில் ஒரு பாடத்தில் நபிகள் பெருமானார் படம் இடம்பெற்றதற்காக அந்நூலை அப்படியே வாபஸ் பெறுவதாக அரசு அறிவித்துள்ளது இஸ்லாமிய அமைச்சர் ஒருவரின் தலையீட்டினால் இது சாத்தியமானது

தமிழ் பிள்ளைகளது 5ஆம் வகுப்பு நூல்பற்றி அரசுக்கு இடித்துச் சொல்ல எம்.பி யோ, அமைச்சரோ இல்லாத நிலையில்- அந்தப் பாட நூல் வகுப்புகளில்- பாட நூலாக இருக்கின்றது

பாடநூல் சபையில் தமிழ் வெளியீட்டுக் குழுவில் 3 முஸ்லிம்களும் 3 தமிழர்களும் அங்கம் வகித்தும் 5 ஆம் வகுப்புத் தமிழ் நூல் மாணவருக்கு ஏற்ற வகையில் அமையாமையும்-

4ஆம் வகுப்பு தமிழ் திரும்பப் பெறவேண்டிய நிலையிலும் இருக்கின்றன என்றால் பிழை எங்கே காணப்படுகிறது?

இதுபற்றி கல்வி அமைச்சர் ஒரு விசாரணைச் சபையை ஏற்படுத்தி அங்கு நடக்கும் திசைலுழல்களை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டியது அவசியமாகின்றது

1987 ஆம் ஆண்டுக்கான தமிழ் நூல்கள் பாடசாலை தொடங்கிய முதல் வாரத்தில் விநியோகிக்கப்பட்டதென்பது வெறும் பேருக்குத் தான் என்பதும் தெளிவாகின்றது.

வழங்கிய நூல்கள் முழுமையாக வகுப்புத் தேவைக்கேற்ப இருக்கவில்லை

அத்துடன் தற்போது யாழ் மாவட்டத்திற்கு விநியோகிக்கப்பட்ட நூல்களின் தமிழ், கணிதம் இடம்பெறவில்லை.

ஆரம்ப பாடசாலை மாணவர் திரிசங்கு சொர்க்கத்தில் விடப்பட்டுள்ளனர்.

யாழ் மாவட்டத்திற்கு இதுவரை விநியோகிக்கப்பட்ட புதிய இலவச நூல்களைக் கவனிப்போம்.

1, 2 ,3 ஆம் ஆண்டு- சைவசமயம், கிறிஸ்தவம்.
4 ஆம் ஆண்டு- சைவசமயம், கிறிஸ்தவம், தமிழ்
5 ஆம் ஆண்டு- சைவசமயம், கிறிஸ்தவம், தமிழ், ஆங்கிலம்.
6 ஆம் ஆண்டு- சைவசமயம், தமிழ்
7ஆம் ஆண்டு- சைவசமயம், தமிழ், ஆங்கிலம்
8ஆம் ஆண்டு- தமிழ், ஆங்கிலம், சமூகக்கல்வி
9ஆம் ஆண்டு- புதிய நூல்கள் வரவில்லை
10 ஆம் ஆண்டு- தமிழ் மட்டும்
11 ஆம் ஆண்டு- தமிழ், கணிதம், ஆங்கிலம், பொது விஞ்ஞானம்

இவற்றைக் கூர்ந்து கவனித்தால் எமக்கு முக்கிய நூல்கள் அனுப்பி வைக்கப்படவில்லை என்பது

(4-ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

For quality Video Filming
VIDEO VIHONS
RAJARAJHAN'S
Effects and Techniques in videography gives great pleasure for all your memorable events at home or else.
No. 353 C, Clock Tower Road,
JAFFNA.
(Near Wellington Junction)

# உதயன்

16 01 1987 வெள்ளிக்கிழமை

சிறந்த முறையில் வீடியோ படம் எடுப்பதற்கு
வீடியோ விஹொன்ஸ்
ஒளிப்பதிவாளர்
சி. இராஜராஜனின்
கலை நுணுக்க ஒளிப்பதிவில்
உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவு செய்துகொள்ளுங்கள்
இல- 353 C, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கு அருகாமை)

## வித்தாரம்

வருக, வருக முரளியாரே! வணக்கம்! புதிய பொங்கல் வாழ்த்துக்கள். இரண்டு நாளாய் உம்மைச் சந்திக்கயில்லை. எங்கே சந்திக்கலாம் எண்டு யோசிச்ச, யோசிச்ச நேரம் போச்சுது.

சரி, அண்டைக்குப் பொங்கலுக்கு முதல் நாள் இரவு கேட்டியே? ரவுண் சினவெடிச் சத்தத்திலேயே மூழ்கிப்போயிருந்திது. இரவுவீட்டை போகயிக்கை ரோட்டுக ளில வைச்ச வெடி கொளுத்தின பிரகிருதியளை பாக்கக்கூடியதாய் இருந்திது.

இரவு நடுச்சாமத்தில நித்திரைகொள்ள முடியயில்லை. காது கன்வம் அடைச்சுப்போட்டுது. இடைக்கிடை சுக்குச் சுக்கு எண்டு, இராமண்ணுமாற்றை இப்பத்தைய ஷெல் குண்டுகள் மாதிரியும் சத்தங்கள் கேட்டுது. அந்தச் சத்தத்தை சாட்டிப்போட்டு உண்மையாவே ஷெல் அடிச்சிருந்தினம் எண்டாலும் சனத்துக்குத் தெரியாது...!

இஞ்சை மண்ணும் மனிசனும் படுகிற கஷ்டங்களில இரவிரவா வெடியா வேண்டிக்கிடக்குது? வெளி மாவட்டங்களில இருந்து அகதியாய் வந்த சனம் சாப்பாட்டுக்கு எத்தினை கஷ்டப்படுதுகள். இவை வெடி கொளுத்தி முஸ்பாத்தி பண்ணுகினம், உவையளை என்ன பிறப்பெண்டு சொல்லுறது. நிச்சயமாய் உப்பிடிக் கொத்தவைக்கு மின்கம்பத் தண்டனை இல்லாவிட்டாலும் கசையடியாவது கொடுக்கவேணும்.

காலநேரம் தெரியாத பிறப்புகள்! எது எதை, எப்ப எப்ப செய்ய வேணும் எண்டு ஒரு ஒழுங்கு நியதி வேண்டாமே...? எங்கடை சனம் எதைச் செய்தாலும் உருப்படப்போறதில்லை...

* * *

என்ன எரிபொருள் தடையை யாழ்ப்பாண மக்கள் சிலபேரும் ஆதரிக்கிறதாக அச்சாணியாளர் அவிழ்த்திருந்தார் படிச்சனியே. அவர் ஆரைச்சொன்னார் எண்டு தெரியயில்லை. உண்மையில அவற்றை திரிக்கிற கற்பனை வளம் அலாதி தான். எந்தத் தம்பியும் அவருக்குக் கிட்டவும் நெருங்கேலாது தெரியுமே...?

இல்லை இல்லை மன்னிக்கவும். கொழும்புப் பேப்பர்களுக்கும் அவருக்கும் இடையில உந்த விஷயத்தில பெரிய போட்டி.

அரசாங்கக் கட்டுப்பாட்டில உள்ள பேப்பர்கள் மட்டுமில்லை தனியார் பேப்பர்களும் யாழ்ப்பாணத்து விஷயங்களை தலைகீழாத்தானே எழுதுகினம்.

ஒரு இங்கிலீஷ்பேப்பர், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில எந்த தட்டுப்பாடும் இல்லை. கிளிநொச்சியில இருந்து எரிபொருள் வருகுது. வவுனியாவில இருந்து மருந்து வருகுது எண்டெல்லாம் கதை விட்டிருக்கு. அவைக்கு கதை சொல்ல ஒரு மீடியா சென்றரும் இருக்குது.

அவையின்ரை கண்டுபிடிப்புகள் வெறும் கற்பனைகள்தான் தம்பி அதுமட்டுமில்லை. அந்தப் பேப்பர்கள் தமிழர் பிரச்சினைபற்றி எழுதயிக்கை கண்டமாதிரி, கண்ணை பின்னை எண்டு எழுதினம். அரசாங்கம் சொல்லவேண்டியதை அவையே சொல்லுகினம்...

பிரபா இஞ்சை ஏன் வந்தார் எண்டது குறித்து ஒவ்வொரு பேப்பர் ஒவ்வொரு மாதிரி கற்பனை பண்ணுது! அட கடவுளே, கதையளை கற்பனை செய்து எழுதலாம். சில பேப்பர்காரருக்கு செய்தியளையும் கற்பனை செய்யிற பழக்கம். எப்படியும் ஒரு 'சென்சேஷன்' அடிக்க வேணும் எண்ட ஆசைதான் அதுக்கு காரணமாய் இருக்குமோ! உந்தச் 'சென்சேஷனை' வாசகர்கள் கெதியில இனங்கண்டு விடுவினம் ...... எண்டது அவைக்குத் தெரியாமல் போனது ஏனோ...?

கொண்டோடி

## தமிழ் மாணவர்களின்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெளிவாகின்றது

சில தமிழ் நூல்கள் அச்சிடுவதில் தாகதமேற்படுவதற்கு மொழிபெயர்த்து வெளியிடும் சிரமமிருப்பதாகச் சமீபத்தில் கல்விச் சேவைகள் அமைச்சர் கூறியுள்ளார்.

தமிழ் மக்களுக்கு விஞ்ஞான, கணித நூல்களை எழுதக் கூடிய ஆசிரியர்கள், அறிஞர்கள் இல்லையா? பூனை கண்ணை மூடிக்கொண்டு பாலைக் குடித்தால் பூலோகம் இருண்டு போகுமா என்ன?

1980ல் இலவச பாடநூல் விநியோகத்தின் பின்னர் தமிழ் மாணவர்கள் பாட நூல்கள் இன்றி அவதிப்படுவதை எவரும் அறிவர்.

திட்டமிட்ட இச் செயல்களை, தமிழ் பேசும் மக்கள், அறிஞர்கள் எதிர்க்காமல், எடுத்துக் காட்டாமல் எத்தனை காலத்திற்குத்தான் இருப்பது?

தமிழ் பிள்ளைகளை அவர் தம் கல்வியைக் காத்தருள வேண்டுமானால் உடன் முயற்சி தேவை.

நாம் மலிவு விலையில் உபபாட நூல்களைக் காலம் தாழ்த்தாது அறிமுகப்படுத்த வேண்டும்.

பூனைக்கு மணி கட்டுவது யார்?

தமிழ் கல்விமான்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், தொழிற் சங்கங்கள் சேர்ந்த ஒரு சபை நிறுவப்பட்டு இதுபற்றி ஆலோசிக்கப்பட வேண்டும்.

ந. சிவபாதம்
(இ. த. ஆசிரியர் சங்க யாழ். மாவட்டப் பிரசாரச் செயலாளர்)

வெளிவந்துவிட்டது!
6ஆம் ஆண்டு
புதிய சமூகக் கல்வி
ஆலோசனை சி. நடராஜா B.A.
வலய ஆசிரிய ஆலோசகர்
எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகள்: லக்சுமி புவலறி
K. K. S. வீதி, யாழ்ப்பாணம்.

★ வடக்கில்

# அரிசி, சீனி, மாவுக்கு தட்டுப்பாடு இல்லை!

யாழ்ப்பாணம், ஜன 16

யாழ் மாவட்டத்திற்கு தேவையான அரிசி, சீனி, மா போதியளவு கையிருப்பில் உள்ளன. தற்போது மேலும் ஒரு சீனிக் கப்பல் துறைமுகத்துக்கு வந்துள்ளது-

ஆகையினால் அரிசி, சீனி, மாவுக்கு இப்போது தட்டுப்பாடு ஏற்படாது என உணவுத் திணைக்கள அதிகாரி திரு. கே. இராஜநாயகம் தெரிவித்தார்.

எரிபொருள் தட்டுப்பாட்டால் ப-நோ. கூ. சங்கங்கள் தமது களஞ்சிய சாலைகளுக்கு உணவு பொருட்களை எடுத்துச் செல்வதிலேயே சிரமங்கள் உள்ளன. ஆனால் அதனால் உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடோ, விலை உயர்வோ ஒருபோதும் ஏற்படாது என்றும் அவர் தெரிவித்தார். (உ-5)

## எயர்லங்கா தலைவரின் மாதச் சம்பளம் ரூ. 1 லட்சத்து 81 ஆயிரம்!

கொழும்பு, ஜன 16

எயர்லங்காவின் முன்னாள் தலைவர் றக்கித்தா விக்ரமநாயகா பெற்ற மாதச் சம்பளம் 1 லட்சத்து 81 ஆயிரத்து 776 ரூபா ஆகும்.

சிங்கப்பூர் எயர்லைனஸ் தனது விமான மோட்டிக்கு வழங்கும் சம்பளம் இதுவாகும்.

முன்னாள் தலைவர் விக்ரமநாயக்கா எயர்லங்கா விசாரணை ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கையில் இத்தகவலை வெளியிட்டார்.

நான் 74 மாதகாலம் எயர்லங்கா தலைவராகப் பணியாற்றினேன். அக்காலத்தில் 1 கோடி 28 லட்சம் ரூபாவை மேலதிக ஊதியமாகப் பெற்றேன்.

இப்பணத்திற்கு நான் வருமான வரி செலுத்தவில்லை. எயர்லங்காதான் வரியைச் செலுத்தியது.

அமைச்சரவை வழங்கிய அனுமதியின் மீது எயர்லங்கா வருமான வரியைச் செலுத்தி வந்தது" -- இப்படி முன்னாள் தலைவர் றக்கித்தா விக்ரமாநாயக்கா தெரிவித்தார் (உ-எ)

## தணிக்கைக்கு எதிராக வழக்கு

ஜோகன்னஸ்பேர்க், ஜன 15

தென்னாபிரிக்க அரசு பத்திரிகைத் தணிக்கையை அமுல் செய்வதை எதிர்த்து தென்னாபிரிக்கப் பத்திரிகையான 'ஸண்டே டைம்ஸ்' நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருக்கிறது. (உ)

எரிபொருள் தடையால் வந்த வினை:

## மின்சார சபை நிலுவை ரூ. 3 கோடி கொடுப்பதில் சிக்கல்

யாழ்ப்பாணம். ஜன 16

அரசின் எரிபொருள் கட்டுப்பாட்டினால் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய 3 கோடி ரூபா நிலுவைப் பணத்தை உரிய தவணையில் செலுத்த முடியாதுள்ளது.

இவ்வாறு யாழ் அரச அதிபர் உள்ளூராட்சி அமைச்சிற்கு அறிவித்துள்ளார் என மாவட்ட அபிவிருத்திச் சபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரசின் எரிபொருள் கட்டுப்பாட்டால் கடந்த சில மாதங்களாக குடாநாட்டுக்குள் குறைந்திருந்த சட்ட விரோத மின் பாவனை மீண்டும் அதிகரித்துள்ளதே இதற்குக் காரணம்.

சட்ட விரோத மின் பாவனையால் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் வரையான காலத்திற்கு 3 கோடி ரூபாவை யாழ். அபிவிருத்திச் சபை இலங்கை மின்சார சபைக்கு நிலுவையாகச் செலுத்த வேண்டியுள்ளது

சென்ற மாதம் கொழும்பில் நடைபெற்ற இது சம்பந்தமான கலந்துரையாடலில் மாதாந்தம் 30 லட்சம் ரூபாயாக இப்பணம் செலுத்தப்பட வேண்டும் என உள்ளூராட்சி அமைச்சு தீர்மானித்திருந்தது.

பத்திரிகைகள், பொது ஸ்தாபனங்கள் உதவியால் சட்ட விரோத மின் பாவனை கடந்த ஆறு மாதங்களாகப் பெருமளவு குறைக்கப்பட்டது.

தற்போதுள்ள எரிபொருள் கட்டுப்பாட்டால் மீண்டும் சட்ட விரோத மின்பாவனை அதிகரித்துள்ளது

இதனால் 3 கோடி ரூபா நிலுவைப் பணத்தைக் கட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் மேலும் அதிக நஷ்டம் எதிர் பார்க்கப்படுகிறது என அதிகாரி தெரிவித்தார். (உ-5)

## கமாண்டோ மீது தாக்குதல்

கொழும்பு, ஜன 16

அதிரடிப் பொலீஸ் படையைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் வறக்காப்பளை நகரில் வைத்துத் தாக்கப்பட்டார்.

கடந்த ஞாயிறு காலை இது இடம் பெற்றது.

முகத்தில் வெட்டுக் காயங்களுடன் அந்தப் பொலீஸ் அதிகாரி கேகாலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (உ-எ)

## வேலை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

னால் இன்று காலை 8மணி தொடக்கம் மறியற் போராட்டம் ஆரம்பமாகும்.

ஊழியர்கள், பொது ஸ்தாபனங்கள் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க மூடப்பட்ட மக்கள் கடைகளை மீண்டும் திறக்கும் முயற்சியிலும் -

வேலைநீக்க உத்தரவை விலக்கிக்கொள்ள வைக்கும் முயற்சியிலும் உதவி அரசாங்க அதிபர் திரு. எல். பி. பாலசிங்கம் ஈடுபட்டு வருகிறார்.

1930 அக்டோபரில் வேலைக்குச் சேர்ந்து பணியாற்றிவந்த 72 சமயாசமய ஊழியர்களே நேற்றுமுதல் வேலை நீக்கஞ் செய்யப்பட்டனர். (உ-எ)

## அகதிகள் வந்த...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கிட்டது.

அவர்கள் எம்மை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். நாம் பயத்தால் கத்தினோம்.

அவ்வேளையில் படையினர் எமது படகை நோக்கி பெற்றோல் குண்டுகளை வீசினர். படகு தீப்பற்றி எரிந்தது.

நாம் அனைவரும் படகிலிருந்து குதித்து நீந்தினோம்.

என்னுடன் சக படகோட்டி ஒருவரும் அரை மணித்தியாலமாக நீந்தி வந்தாராயினும் அவருக்குப் பின்னர் என்ன நடந்தது என்று தெரியவில்லை.

கடலில் குதித்த ஏனையோர் தப்பியிருக்கவேண்டும். அல்லது படையினர் அவர்களைக் கைது செய்திருக்க வேண்டும்

அவர்கள் உயிரிழந்திருந்தால் அவர்களின் சடலங்களாவது கரை ஒதுங்கியிருக்கும்.

நான் நீண்டநேரம் நீந்தினேன்.

வழியில் ஒரு பாரிய கப்பல் நங்கூடமிட்டிருந்தது.

நான் வெளிநாட்டுக் கப்பல் அது என்று எண்ணினேன். அதில் ஏறித் தப்பும் எண்ணத்தில் அதை நோக்கி நீந்தினேன்.

அதை நான் அண்மிக்கும்போது அந்தக் கப்பல் வேகமாக ஆழ்கடல் நோக்கிச் சென்றுவிட்டது.

நான் ஒருவாறு நீந்திக் கரைசேர்ந்தேன்.

நான் பாதுகாப்புத் தேடிச் சென்ற கப்பல் கடற்படைக்குச் சொந்தமானது என்பதைப் பின்னர்தான் அறிந்தேன்.

நல்லவேளை. அதிர்ஷ்டம் இருந்ததால் தப்பினேன்,

இப்படி அவர் கூறினார். (உ-160)

## ராஜீவை...

(1-ம பக்கத்தொடர்ச்சி)

மையலுவலகத் திறப்பு விழாவில் ஏழு வெளியுறவு அமைச்சர்களும் கலந்துகொள்ள உள்ளனர். (அ-எ)

## சுவீப் முடிவுகள்

1 ஆவது பரிசு:- X 5080
2 ஆவது பரிசு:- P 8167
3 ஆவது பரிசு:- T 7363

ஐம்பது ஆறுதல்பரிசுக்குரிய இலக்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| J 8211 | B 7380 | W 8856 | V 6887 | D 5161 | G 7040 |
| C 5038 | D 5349 | C 6318 | V 5770 | Q 5695 | Q 6373 |
| V 5948 | U 7920 | A 5195 | J 8913 | Z 5928 | U 7612 |
| Y 7222 | D 7482 | Z 8987 | Z 5007 | X 5181 | A 6106 |
| | | C 6413 | J 8758 | Z 5723 | Z 5945 |
| | | V 7246 | Y 8998 | H 8453 | R 6344 |
| | | W 6720 | V 5698 | V 8623 | Z 7252 |
| | | S 8145 | R 5039 | Q 6299 | T 7851 |
| | | | | T 7440 | W 6432 |
| | | | | R 8465 | A 7996 |
| | | | | H 8811 | M 8037 |
| | | | | A 8981 | M 8180 |
| | | | | W 6262 | V 8709 |

# அதிகமாய்ப் பேசாமல் அதிகம் செய்ய விரும்புகிறேன்

## புதிய கல்விப்பணிப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜன. 16

"அதிகம் பேசி சிலவற்றைச் செய்வதைவிட, கொஞ்சமாகப் பேசி அதிகமாகச் சாதிப்பதிலேயே நான்விரும்புகிறேன். இதனால் பத்திரிகைகளுக்கு எனது கல்வித் திட்டங்களை நான் பெரிதாகக் கூறிக்கொள்ள விரும்பவில்லை.

"எனது சொந்த-- பிறந்த ஊரில் கடமையாற்றுவது எனக்குப் புதிதல்ல. தெரிந்த பரிட்சயமான தனித்துவக் கல்விப் பாரம்பரியத்தைக் கொண்ட மக்களுக்கான எனது சேவை கல்வி பணிப்பாளரென்ற நிலையில் தொடர்கின்றதேயன்றி, தொடங்கவில்லை."

இவ்வாறு நேற்று யாழ் கல்விப் பணியகத்தில் புதிய கல்விப் பணிப்பாளராகக் கடமையேற்றுக் கொண்ட ஜனாப் எம். எம். மன்சூர் தெரிவித்தார்.

கல்வி அதிகாரிகள், பணியக அதிகாரிகள், ஊழியர்கள், பொதுமக்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் பெரு வரவேற்பின் மத்தியில் தனது கடமையினை ஏற்றுக் கொண்ட ஜனாப் மன்சூர் தொடர்ந்தகூறுகையில்-

கல்வியையே தமது பெரும் சொத்தென மதிக்கும் யாழ்ப்பாண மக்களின் உணர்வுகள், கல்விச் செயற்பாடுகள் எனக்கு மிகப் பழக்கமானவை; கல்வி அதிகாரியாக, பிரதம கல்வி அதிகாரியாக அவர்களுக்குச் சேவைசெய்யக் கிடைத்த வாய்ப்புப்போல, கல்விப் பணிப்பாளராகவும் சேவைசெய்யவும் வாய்ப்புக் கிடைத்துள்ளது என்றார்.

ஆடம்பரமான விழாக்களையும், பத்திரிகை விளம்பரங்களையும் நான் மட்டுமன்றி என்னுடன் கடமைபுரியும் கல்வி அதிகாரிகளும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அரசின் புதிய சுற்றுநிருபமும் அதையே கூறுகின்றது. (உ-119-5

## விளையாட்டரங்கு

## இலங்கை அணி மண் கவ்வியது!

பரோடா, ஜன. 16

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கட் ஆட்டத் தொடரிலும் இந்தியாவிடம் இலங்கை அணி மண்கவ்வியது.

நேற்று பரோடாவில் நடைபெற்ற நான்காவது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் ஆட்டத்தில் தோல்வியடைந்ததன் மூலம் 5 ஆட்டங்களைக்கொண்ட இத்தொடரில் இந்தியா இப்போதே 3 — 1 என்ற கணக்கில் வெற்றி பெற்றுவிட்டது.

ஏற்கனவே மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்தியாவிடம் இலங்கை படுதோல்வியடைந்திருந்தது என்பது தெரிந்ததே.

நேற்றைய ஆட்டத்தில் இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடி 43 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 235 ஓட்டங்களைப் பெற்றது.

சுனில் கவாஸ்கர், கிருஷ்ணமாச்சாரி, சிறீகாந்த் ஆகியோர் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி முறையே 69,63 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலளித்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியினால் 36.3 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 141 ஓட்டங்களையே பெற முடிந்தது.

ரவிசாஸ்திரி, ஷில்லால்யாதவ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். சிறிகாந்தும் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

ஐந்தாவது - இறுதி - மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் ஆட்டம் நாளை (சனிக்கிழமை) பம்பாயில் நடைபெறும். (உ)

## டிப்ளோமா பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன. 16

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்ட 1986 ஆம் ஆண்டுக்கான கல்வியியலில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமாக் கல்வி நெறிக்கான பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி சித்தியடைந்தோரின் விவரங்கள் பின்வருமாறு:-

விசேட சித்தி பெற்றோர்:- திரு. வீ. குகாதரன், திருமதி வீ. விமலநாதன்.

திறமைச் சித்தி பெற்றோர்:- திருமதி. கே. அனந்தசயனன் திருமதி, ஐ. ஜெயக்குமாரன் செல்வி. எஸ். மயிலானந்தன் திரு கே. சதாசிவம் செல்வி கே. சுப்பிரமணியம்.

சித்தியடைந்தோர்:- செல்வி சி. சடாச்சரம் திரு. பி சிறீகரன் திரு. எஸ் சர்வானந்தர் செல்வி. எல். சுந்தரம் பிள்ளை திரு. என். உடைக்காடர் சின்னையா திரு. ஜி. பி. அல்பிரட் திரு. பி. எம். கே. அந்தோனி திரு ஐ. அரியரட்ணம் திருமதி. ஆர். கங்காதரன் திருமதி. ஆர் இருதயநாதன் திரு. வி. ஜெபரட்ணம் திரு. கே. யேசுதாசன் திருமதி. பி. கமலேந்திரன்

(மிகுதி ஞாயிறு உதயனில்)

## அடகு வைத்தோர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 16

யாழ் அடகு வைத்தோர் சங்கப் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் வின்சர் திரையரங்கில் நடைபெறும். (உ-எ)

## நீத்தார் பட்டியல்

சுழிபுரம் பத்திரகாளியம்பாள் தேவஸ்தான பிரதமகுரு
சி. வ. இராதாக்கிருஷ்ணக்குருக்கள்

சுழிபுரம் குடியிருப்பு சிவஸ்ரீ வரதராஜக் குருக்கள் தம்பதியின் சிரேஷ்ட புதல்வன் இராதாக்கிருஷ்ணக்குருக்கள் (தவம்) காலமாகிவிட்டார். இவர் சாவித்திரியின் அன்புக்கணவரும், மனவிினி, சுனுதனன் ஆகியோரின் தந்தையாருமாவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (16-01-87) காலை நடைபெறும்.

வீடு உடன் வாடகைக்கு
கொக்குவிலில் கே. கே. எஸ். வீதிக்குச் சமீபமாக மிக வசதியான பெரியவீடு ஒன்று உடனடியாக வாடகைக்கு உண்டு. மின்சாரம், தண்ணீர், தொலைபேசி வசதிகள் உள்ளன.
பொறியியலாளர், கணக்காளர், டாக்டர் போன்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்பு கொள்க: விளம்பர இல: 105 மே/பா. உதயன், யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 16-01-1987
Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under. umber QJ. 60 N 86. Telephone, 24805, 23078.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org